ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/19 - 2012 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2012.12.18

*1789/19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**சில்லறை, மொத்த விற்பனைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் சில்லறை மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள முடிபுகள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

இம் முடிவுகள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 12.

**அட்டவணை**

சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 599/12 ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் விரிவாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டுள்ளதும், கடைசியாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 1668/ 19 ஆம் இலக்க அதிவிசேஷ வர்த்தமானியில் வெளியிட்ட ஓகத்து மாத அறிவித்தலின் மூலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையில் பாகம் II இற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியை பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்:-

"பாகம் II

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்**

நிரல் I

**வேலையாளரின் வகுப்பு :**

**தரம் I** பண்டகசாலைப் பொறுப்பாளர், கணக்கு பதியுனர்கள், முகாமையாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், மருந்தாளர்கள்.

**தரம் II** தொலைபேசி இயக்குநர்கள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், பேரேட்டு எழுதுவினைஞர்கள், கணக்கு எழுதுவினைஞர்கள், உதவிக் காசாளர்கள், செலவுக் கணக்கு எழுதுவினைஞர்கள், சம்பள எழுதுவினைஞர்கள், காசு இயந்திர இயக்குநர்கள், பற்றுச்சீட்டு எழுது வினைஞர்கள்.

**தரம்** III பற்றுச்சீட்டு சேகரிப்போர், விற்பனையாளரும் விற்பனைப் பெண்களும், செவ்வைபார்ப்போர்.

**தரம்** IV தொழிலாளர்கள், ஒப்படைப்பாளர்கள், கடைச் சிப்பந்திகள், பொதியிடுவோர்கள், செய்திப் பணியாளர்கள், கருமபீடப் பணியாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், பம்பிக் கவனிப்பாளர்கள், துவிச்சக்கரப் பணியாளர்கள்.

*நிரல் II*

***மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்***

*ஊழியர்களின் வகுப்பு*

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,610.00 | 10,060.00 | 9,515.00 | 8,970.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,785.00 | 10,210.00 | 9,640.00 | 9,070.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,960.00 | 10,360.00 | 9,765.00 | 9,170.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,135.00 | 10,510.00 | 9,890.00 | 9,270.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,310.00 | 10,660.00 | 10,015.00 | 9,370.00“ |
| 6 ஆம் ஆண்டு | 11,485.00 | 10,810.00 | 10,140.00 | |
| 7 ஆம் ஆண்டு | 11,660.00 | 10,960.00 | 10,265.00 | |
| 8 ஆம் ஆண்டு | 11,835.00 | 11,110.00 | 10,390.00 | |
| 9 ஆம் ஆண்டு | 12,010.00 | 11,260.00 | 10,515.00 | |
| 10 ஆம் ஆண்டு | 12,185.00 | 11,410.00 | 10,640.00 | |

*1- 65/1*

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

***அச்சிடுதல் தொழில்***

*(136 ஆம் அத்தியாயமாகிய ) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் அச்சிடுதல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012,திசெம்பர் 12.

***அட்டவணை***

*அச்சிடுதல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம்*

கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுததப்படுதல் வேண்டும் :-

"பாகம் II

***வேலையாளர் வகுப்பு :***
***வகுப்பு 'அ' வேலையாளர் :***

செய்தித்தாள் உற்பத்தியில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டோரல்லாத செய்முறை சித்திர வேலையாளர் ; செய்முறை கமரா இயக்குநர்கள், செய்முறை செதுக்குநர் ஆட்கள், சிலைச்சித்திர எதிரிட்டு எந்திரம் பேணுவோர், சுழற்சி எந்திரம் பேணுவோர், புகைப்படம் பிடிப்போரும் ரொடாகிறேன் எந்திரம் பேணுவோரும், தகரத்தட்டு அச்சாளர்கள், படலம் கோர்ப்போர், வரியெழுத்துப்பொறி இயக்குநர்கள், ஒற்றையச்சு வார்ப்புப் பலகை இயக்குநர்கள், லட்லோ இயக்குநர்கள், வரியெழுத்துப் பொறி இயந்திரத் தொழிலாளர், அச்சிடுதல் இயந்திரத் தொழிலாளர்கள் செய்முறை செதுக்குநர்களும் ஏற்றுநர்களும், செய்முறை அச்சாளர்கள், கீழ்வரி எழுத்துப் பொறிமாற்றுநர்கள், வரியெழுத்துப்பொறி செவ்வைபார்க்குநர் வாசிப்போர்.

***வகுப்பு 'ஆ' வேலையாளர் :***

ஒற்றையச் செழுத்து வார்ப்போர், இயக்குநர்கள் (பரிசாரர்கள்), மிகைவார்ப்புப் பரிசாரர்கள், எல்றோட் எந்திர இயக்குநர்கள், அச்சுக்கோர்போர், நிரை கட்டுபவர்களும் செவ்வை செய்வோரும் அச்சகர்கள் எழுத்தச்சு உருளை எந்திரம் பேணுவோரும் கட்டுநரும், பட்டுத்திரை எந்திர இயக்குநர்களும் நம்பர் முத்திரையச்சு, ஆக்குநர்களும் புடைப்பு முத்திரைச் சாயம் அழுத்தல் எந்திர இயக்குநர்கள், தையல் எந்திர இயக்குநர்கள், மடிக்கும் எந்திர இயக்குநர்கள் அட்டைப் பெட்டி வெட்டுதல், ஒட்டுதல் இயந்திர இயக்குநர்கள், வெட்டுநர்கள், (கையினாலும் எந்திரத்தினாலும் ) கிலற்றின் எந்திர இயக்குநர்களும் கில்டேஸ் கோடிடுநர்களும் (கையினாலும் எந்திரத்தினாலும்) கில்டிங் எந்திர இயக்குநர்கள், தின் அச்சினால் பல்லுருளை இயந்திர இயக்குநர்கள், வார்ப்புப் சாலையாளர், வார்ப்புச்சாலைத்தகடு வார்ப்பவர், தட்டச்சு வார்ப்போர், முழுதாகத் தன்னியக்க எந்திரங்கள் இயக்குகின்ற உருளை வார்த்தல் (உருளை வார்க்கும் துவக்கினைப் பயன்படுத்தி) பிளேற்றன் எந்திரம் பேணுவோர், உருளை வார்ப்போர், பிளேற்றன் இயந்திரம் பேணுவோர் (கையினால் ஊட்டப்பட்டது) உருளை வார்ப்போர் (கையினால்).

***வகுப்பு 'இ' வேலையாளர் :***

வார்ப்புச்சாலைத் தகடு வெட்டுவோர், வார்ப்புச் சாலைத் தொழிலாளர் சுழற்சி எந்திரத் தொழிலாளர், பொறியிடுநர், தொகை எண்ணுவோர் அத்துடன் செவ்வை பார்ப்போர்.

***வகுப்பு 'ஈ' வேலையாளர் :***

18 வயதுக்குக் குறையாத திறமையற்ற வேலையாளர்.

***வகுப்பு 'உ' வேலையாளர் :***

18 வயதுக்குக் குறைந்த திறமையற்ற வேலையாளர் :

***வகுப்பு 'ஊ' வேலையாளர் :***

காவற்காரர்.

**தொழில் பயில்வோரும் தொழிற்பயிற்சி பெறுவோருமல்லாத வேலையாளர்களுக்கு மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| ஊழியர் ஆண்டு | 'அ' வகுப்பு<br>ரூ. ச. | 'ஆ' வகுப்பு<br>ரூ. ச. | 'இ' வகுப்பு<br>ரூ. ச. | 'ஈ' வகுப்பு<br>ரூ. ச. | 'உ' வகுப்பு<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,530.00 | 10,140.00 | 9,750.00 | 9,360.00 | 8,970.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,730.00 | 10,315.00 | 9,900.00 | 9,485.00 | 9,070.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,930.00 | 10,490.00 | 10,050.00 | 9,610.00 | 9,170.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| ஊழியர் ஆண்டு | 'அ' வகுப்பு ரூ. ச. | 'ஆ' வகுப்பு ரூ. ச. | 'இ' வகுப்பு ரூ. ச. | 'ஈ' வகுப்பு ரூ. ச. | 'உ' வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 4 ஆம் ஆண்டு | 11,130.00 | 10,665.00 | 10,200.00 | 9,735.00 | 9,270.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,330.00 | 10,840.00 | 10,350.00 | 9,860.00 | 9,370.00 |
| 6 ஆம் ஆண்டு | 11,530.00 | 11,015.00 | 10,500.00 | 9,985.00 | 9,470.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,730.00 | 11,190.00 | 10,650.00 | 10,110.00 | 7,570.00 |
| 8 ஆம் ஆண்டு | 11,930.00 | 11,365.00 | 10,800.00 | 10,235.00 | 9,670.00 |
| 9 ஆம் ஆண்டு | 12,130.00 | 11,540.00 | 10,950.00 | 10,360.00 | 9,770.00 |
| 10 ஆம் ஆண்டு | 12,330.00 | 11,715.00 | 11,100.00 | 10,485.00 | 9,870.00 |
| 11 ஆம் ஆண்டு | 12,530.00 | 11,890.00 | 11,250.00 | 10,610.00 | 9,970.00 |
| 12 ஆம் ஆண்டு | 12,730.00 | 12,065.00 | 11,400.00 | 10,735.00 | 10,070.00 |
| 13 ஆம் ஆண்டு | 12,930.00 | 12,240.00 | 11,550.00 | 10,860.00 | 10,170.00 |
| 14 ஆம் ஆண்டு | 13,130.00 | 12,415.00 | 11,700.00 | 10,985.00 | 10,270.00 |
| 15 ஆம் ஆண்டு | 13,330.00 | 12,590.00 | 11,850.00 | 11,110.00 | 10,370.00 |

தொழில் வகுப்புக்களிலுள்ள பயில்வோருக்கும் தொழில் பயிற்சி பெறுவோருக்கும்.

| ஊழியர் ஆண்டு | 'அ' வகுப்பு ரூ. ச. | 'ஆ' வகுப்பு ரூ. ச. | 'இ' வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 8,000.00 | 7,730.00 | 7,450.00 |
| 2 ஆம் ஆண்டு | 8,150.00 | 7,855.00 | 7,550.00 |
| 3 ஆம் ஆண்டு | 8,300.00 | 7,980.00 | 7,650.00 |
| 4 ஆம் ஆண்டு | 8,450.00 | 8,105.00 | 7,750.00 |
| 5 ஆம் ஆண்டு | 8,600.00 | 8,230.00 | 7,850.00" |

*1- 65/2*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பீடி உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவிற்கமைய, பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென, மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012,திசெம்பர் 12.

**அட்டவணை**

பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11208 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக்

*காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-*

**"II ஆம் பாகம்**

**துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

*(பீடி சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் "பீடிப் புகையிலையை" நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.*

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 310.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 350.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 385.00 |

*(சுற்றிலைகளுக்குள் பீடிப் புகையிலையை நிரப்புதல் பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் சுற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தால் வேண்டும்.*

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 235.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 263.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 290.00 |

*(சுருட்டுவதற்கு சுற்றிலைகளைத் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.*

| | | |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 156.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 168.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 182.00 |

*சுருட்டிய பீடிகள் சுற்றி வட்ட நாமவிலாசம் ஒட்டுவதற்கு துண்டு வேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் 1000 பீடிகளுக்கு 40.00 ரூபாவாக இருத்தல் வேண்டும்."*

*1- 65/3*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**செங்கல், ஓடு உற்பத்தித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

டபிள்யு. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
*2012, திசெம்பர் 12.*

**அட்டவணை**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1961 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 12617 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் ஏற்கனவேயுள்ள பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**"II ஆம் பாகம்**

செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பள அளவும் ஆகக்குறைந்த மாதச் சம்பள அளவும் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும் :-

**வேலையாளர் வகுப்பு** :

**தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II** :

பதிப்பு இயந்திரத்திற்கு ஊட்டுவோர் (கையால்), களிமண் ஓடுகளை சுடுவதற்காகச் சூளையில் ஏற்றுவதில் அல்லது அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் /தரம் பிரிப்போர்

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I**

பதிப்பு இயந்திரத்திற்கு களிமண் ஊட்டுநர் (இயந்திரம்), ;சூளையில் (சூட்டடுப்பில்) வேலைபார்க்கும் தீவைப்போர்

**ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்**

உருளை வேலையாளர், மொத்த உருவெட்டுநர், ஓட்டுத் தகட்டுக்கு எண்ணெய் பூசுவோர், அத்துடன் மெருகூட்டுவோர், நறுக்குவோர், காயாத ஓடுகளை தரம்பிரிப்போர், வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்காக ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

**தேர்ச்சியற்றவேலையாளர்கள்** :

களிமண் கலப்பதிலும் பதமாக்குவதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், இழுவண்டியில் நிரப்புவோர், களிமண் வேலையாட்கள், மொத்த உருகாவுவோர், இயந்திர மூலமாகக் கலப்பதிலும் நீர்சேர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அடுக்கு வரிசை அமைப்புக்களில் ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், ஓடுகளை காயவைப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள் காயாத ஓடுகள் தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், விறகு காவுவோர் நீர்விட்டுக் குழைக்கும் இயந்திரம் ஓட்டுநர், உலையிலிருந்து சுட்ட ஓடுகளை அகற்றுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அமுக்கு இயந்திரங்களுக்கு அல்லது களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கு களிமண் தொகுதிகளை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், சுடுவதற்காகச் சூளைகளுக்குள் ஓடுகளை ஏற்றுவதிலும் அடுக்குவதிலும் ஈடுபட்டுள்ள உதவியாளர்கள்.

**சாதாரண வேலை நாளொன்றிற்கான சம்பள வீதங்கள்**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| வேலையாளர் வகுப்பு | ரூ. ச. |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் I | 412.00 |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II | 390.00 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் | 367.00 |
| தேர்ச்சி யற்ற வேலையாளர்கள் | 345.00 |

**ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

| வேலையாளர் வகுப்பு | 1 ஆம் ஆண்டு ரூ. ச. | 2 ஆம் ஆண்டு ரூ. ச. | 3 ஆம் ஆண்டு ரூ. ச. | 4 ஆம் ஆண்டு ரூ. ச. | 5 ஆம் ஆண்டு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I | 10,312.50 | 10,487.50 | 10,662.50 | 10,837.50 | 11,012.50 |
| தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் தரம் II | 9,750.00 | 9,900.00 | 10,050.00 | 10,200,.00 | 10,350.00 |
| தேர்ச்சியற்ற வேலையாளர்கள் | 9,187.50 | 9,312.50 | 9,437.50 | 9,562.50 | 9,687.50 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற வேலையாளர்கள் | 8,625.00 | 8,725.0 | 8,825.00 | 8,925.00 | 9,025.00" |

1- 65/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

***திரைப்படத் தொழில்***

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில் தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 12.

**அட்டவணை**

*திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் செய்யப்பட்டவையும் 1949ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதிய 9,961 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் I ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-*

**"பாகம் I**

*திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் சேவையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேர வேலைக்கான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பள அளவு முறையே மாநகரசபை எல்லைக்குட்பட்ட திரைப்படக் கூடங்கள், மாநகர சபை எல்லைக்குட்படாத திரைப்படக்கூடங்களுக்குரிய வகையில் முறையே I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

**ஊழியர் வகுப்பு :**

***(அ) எழுதுவினைஞர் தரமல்லாத :***

தேர்ச்சியற்றோர்

விளம்பர வண்டியிழுப்போர், விளம்பர அல்லது சுவரொட்டிப் பையன், குளியல் அறைப் பையன், கார் அல்லது சைக்கிள் நிறுத்திட ஏவலாள், சொக்களேற் பையன், துப்புரவு செய்பவர், உடுதுணியறைப் பையன், மலசலகூடத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, வாசல் காப்போன், மண்டப பையன், சேவகர், சான்ட்விச் பையன், மென்பானம் வைத்திருப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளி, இருக்கை காட்டும் ஆண், இருக்கை காட்டும் பெண் பணியாளர், உணவு விடுதி மேசைப் பணியாளர், காவலாளர் (பகல்), காவலாளர் (இரவு).

**ஓரளவு தேர்ச்சியுள்ளோர்**

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், உதவி எஞ்சின் ஓட்டுனர், சரிபார்ப்பவர், சமையற்காரர் தரம் II (கீழ்நிலை), மீளச் சுற்றுபவர், தொலைபேசி இயக்குநர், மூன்றாவது உதவி இயக்குநர்.

**தேர்ச்சியுள்ளோர் - தரம் II**

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், தச்சர், சமையற்காரர் தரம் I உயர்நிலை, மின்சாரத் தொழிலாளர் தரம் II, திரைப்படச்சுருள் பழுது பார்ப்பவர் தரம் II, கட்புல, செவிப்புல இணைப்பு எந்திர இயக்குநர், இரண்டாவது உதவி இயக்குநர், மேற்பார்வையாளர் அல்லது தலைமை சரிபார்ப்போர், கூடாரத் தலைவர், மின்கம்பியாளர், தீயணைப்பாளர்.

**தேர்ச்சியுள்ளோர் - தரம் I**

தலைமை இயக்குநர், ஆமேச்சர் சுற்றுபவர், மின்சாரத் தொழிலாளர் (தரம் I), எஞ்சின் ஓட்டுநர், திரைப்படச் சுருள் அறை பழுதுபார்ப்பவர் (தரம் I), கூடாரம் கட்டுபவர்.

(ஆ) ***எழுதுவினைஞர் - தரம் III***

விளம்பர எழுதுவினைஞர், உதவிக் காசாளர் எழுதுவினைஞர் (அனுப்புதல்), நீக்கற் பொறுப்பு எழுதுவினைஞர், ஆசன முற்பதிவு எழுதுவினைஞர், ஆசன பதிவு எழுதுவினைஞர்.

**தரம் II**

விளம்பர முகாமையாளர், காசாளர் எழுதுவினைஞர், எழுதுவினைஞர் (கணக்குகளும் பொதுவும்), தட்டெழுத்தாளர், சரக்கு மேசை எழுதுவினைஞர், களஞ்சியப் பொருட்காப்பாளர், கணக்குப் பதிவாளர்.

**தரம் I**

பிரதம எழுதுவினைஞர்

**ஏனையோர்**

முகாமையாளர்
உதவி முகாமையாளர்

***விளக்க அட்டவணை I***

(மாநகர எல்லைக்குள்)

**ஒரு மாதத்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

ஊழிய ஆண்டு

| வேலையாளர்களின் வகுப்பு | 1 ஆம் ஆண்டு ரூ. ச. | 2 ஆம் ஆண்டு ரூ. ச. | 3 ஆம் ஆண்டு ரூ. ச. | 4 ஆம் ஆண்டு ரூ. ச. | 5 ஆம் ஆண்டு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| (அ) எழுதுவினைஞர் | | | | | |
| தரமல்லாத தேர்ச்சியற்றோர் | 8,850.00 | 8,950.00 | 9,050.00 | 9,150.00 | 9,250,00 |
| அரைத்தேர்ச்சியுள்ளோர் | 9,220.00 | 9,345.00 | 9,470.00 | 9,595.00 | 9,720.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 9,740.00 | 9,890.00 | 10,040.00 | 10,190.00 | 10,340.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 10,625.00 | 10,800.00 | 10,975.00 | 11,150.00 | 11,325.00 |
| (ஆ) எழுதுவினைஞர் | | | | | |
| தரம் III | 9,220.00 | 9,345.00 | 9,470.00 | 9,595.00 | 9,720.00 |
| தரம் II | 9,710.00 | 9,860.00 | 10,010.00 | 10,160.00 | 10,310.00 |
| தரம் I (பிரதம எழுதுவினைஞர்) | 10,325.00 | 10,500.00 | 10,675.00 | 10,850.00 | 11,025.00 |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| வேலையாளர்களின் வகுப்பு | 1 ஆம் ஆண்டு ரூ. ச. | 2 ஆம் ஆண்டு ரூ. ச. | 3 ஆம் ஆண்டு ரூ. ச. | 4 ஆம் ஆண்டு ரூ. ச. | 5 ஆம் ஆண்டு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 10,990.00 | 11,165.00 | 11,340.00 | 11,615.00 | 11,690.00 |
| உதவி முகாமையாளர் | 9,600.00 | 9,975.00 | 9,900.00 | 10,050.00 | 10,200.00 |

**அட்டவணை** II

(மாநகர எல்லைக்கு வெளியே)

**ஒரு மாதத்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

**ஊழிய ஆண்டு**

| வேலையாளர்களின் வகுப்பு | 1ஆம் ஆண்டு ரூ. ச. | 2ஆம் ஆண்டு ரூ. ச. | 3ஆம் ஆண்டு ரூ. ச. | 4ஆம் ஆண்டு ரூ. ச. | 5ஆம் ஆண்டு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| (அ) எழுதுவினைஞர் | | | | | |
| தரமல்லாத தேர்ச்சியற்றோர் | 8,925.00 | 9,025.00 | 9,125.00 | 9,225.00 | 9,325.00 |
| அரைத்தேர்ச்சியுள்ளோர் | 9,295.00 | 9,420.00 | 9,545.00 | 9,670.00 | 9,795.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 9,810.00 | 9,960.00 | 10,110.00 | 10,260.00 | 10,410.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 10,695.00 | 10,870.00 | 11,045.00 | 11,220.00 | 11,395.00 |
| (ஆ) எழுதுவினைஞர் தரம் III | 9,295.00 | 9,420.00 | 9,545.00 | 9,670.00 | 9,795.00 |
| தரம் II | 9,295.00 | 9,445.00 | 9,595.00 | 9,745.00 | 9,895.00 |
| தரம் I (பிரதம எழுதுவினைஞர்) | 10,135.00 | 10,310.00 | 10,485.00 | 10,660.00 | 10,835.00 |
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 10,805.00 | 10,980.00 | 11,155.00 | 11,330.00 | 11,505.00 |
| உதவி முகாமையாளர் | 9,375.00 | 9,525.00 | 9,675.00 | 9,825.00 | 9,975.00" |

*1- 65/5*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**இறப்பர் ஏற்றுமதித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012,திசெம்பர் 12.

2-G 17037

**அட்டவணை**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டு கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ் அட்டவணையின் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"**பகுதி** II

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

**தொழிலாளர் வகுப்பு** :

**தரம்** II :

வெட்டுதலும், பூசனம் பிடித்த இறப்பரைக் கழுவுதலும் அதற்குப் புகையிடுதலும் அமர்ந்து பொறிகளுக்கும் நிறுக்கும் எந்திரங்களுக்கும் களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தள்ளுதல் உட்பட பொது வேலை, சிப்பமாக்குவதற்கு இறப்பரை ஒன்று சேர்த்தலும் சுற்றுதலும், அமர்த்துதலும், வளையமிடுதலும், கம்பிகட்டுதலும், கடைச்சணற் சாக்கு உறைகள் வெட்டுதல், வர்ணப்பசை பூசுதலும் காயவைத்தலும், ஒன்று சேர்த்தலும் அடையாளமிடுதலும், விசேடமாகப் பொறியிடுவதற்கு கடைச்சணற் சாக்கைப் பரவிவிடுதல் சிப்பங்களை கடைச்சணற் சாக்கினால் மூடுதலும் வைத்தலும், சிப்பங்களை, ஆயத்தஞ் செய்தலும் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும்.

**இடைநிலைத் தரம்** :

நிறுத்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்தல் தொழிலிலீடுபடுத்தப்பட்டுள்ள அமர்த்து பொறி இயக்குநரின் வேலை.

தரம் I :

சிப்பங்களை ஏற்றுதல், தரையிறக்குதல் அத்துடன் கொண்டு செல்லல், அடுக்குதல்.

காவலாளர்கள் :

| ஊழியர் ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | இடைநிலைத் தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | காவலாளர்கள்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 8,970.00 | 9,360.00 | 9,750.00 | 8,970.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,070.00 | 9,485.00 | 9,900.00 | 9,070.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,170.00 | 9,610.00 | 10,050.00 | 9,170.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,270.00 | 9,735.00 | 10,200.00 | 9,270.00 |
| 5 ஆம் ஆண்டு | 9,370.00 | 9,860.00 | 10,350.00 | 9,370.00 |
| 6 ஆம் ஆண்டு | 9,470.00 | 9,985.00 | 10,500.00 | 9,470.00 |
| 7 ஆம் ஆண்டு | 9,570.00 | 10,110.00 | 10,650.00 | 9,570.00 |
| 8 ஆம் ஆண்டு | 9,670.00 | 10,235.00 | 10,800.00 | 9,670.00 |
| 9 ஆம் ஆண்டு | 9,770.00 | 10,360.00 | 10,950.00 | 9,770.00 |
| 10 ஆம் ஆண்டு | 9,870.00 | 10,485.00 | 11,100.00 | 9,870.00 |
| 11 ஆம் ஆண்டு | 9,970.00 | 10,610.00 | 11,250.00 | 9,970.00 |
| 12 ஆம் ஆண்டு | 10,070.00 | 10,735.00 | 11,400.00 | 10,070.00 |
| 13 ஆம் ஆண்டு | 10,170.00 | 10,860.00 | 11,550.00 | 10,170.00 |
| 14 ஆம் ஆண்டு | 10,270.00 | 10,985.00 | 11,700.00 | 10,270.00 |
| 15 ஆம் ஆண்டு | 10,370.00 | 11,110.00 | 11,850.00 | 10,370.00" |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தித் (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் விசுக்கோத்து,இனிப்பு வகைகள் உற்பத்தி (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2013, ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,<br>
செயலாளர்,<br>
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,<br>
கொழும்பு 5,<br>
2012, திசெம்பர் 12.

#### அட்டவணை

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) தொழிலுக்கான சம்பளத் சபையினாலாக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 14806 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டனவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்கள், பின்வரும் புதிய பகுதியினை அவ் அட்டவணையின் பாகம் II இற்கு பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

#### "பாகம் II

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) தொழிலில் ஈடுபட்டுள்ள கீழ்க் காட்டப்பட்டுள்ள வேலையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேரவேலைக்காக கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த மாதாந்த சம்பள அளவுகள் முறையே இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கும் உரிய வகையில் I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**''அ'' வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) :**

**(அ) விசுக்கோத்து உற்பத்தி** :
பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்.

கலக்கும் தொட்டிகளையும் கொள்கலன்களையும் துப்பரவு செய்தல், சேர்ப்புத்திரவியங்களை நிறுத்தலும் அளத்தலும், இரசாயனப் பொருள்கள், சாரம், சாயம் ஆகியவற்றைக் கூட்டுதல் கலக்கும் கருவிகளுக்கு ஊட்டுதல் என்பன உட்பட பிசைந்த மாவைக் கலக்குதல் தொடர்பான செய்கைகள் கனல் அடுப்பில் இடுவோர்கள், கனல் அடுப்பு உதவியாளரினதும் வேலை உட்பட விசுக்கோத்து சுடுதல், அடுக்குப்பொறி தொடர்பான செய்கைகள்.

**(ஆ) இனிப்பு வகை உற்பத்தி** :

சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல், "வெப்ப மேசைகளுக்கும்'' அவற்றிலிருந்தும் "பாகுவை'' அகற்றுதல் தொடர்பான வேலை, "சூடாற்று மேசைகளுக்கும்'' அவற்றிலிருந்தும் பாகுவை அகற்றுதல் தொடர்பான வேலை "பாகுஊட்டி'' தொடர்பான செய்கைகள், "பாகுவைத்'' தடங்களிற் கொட்டுதல் தொடர்பான வேலை, "வெட்டிச் சுற்றும் பொறி'' தொடர்பான வேலை " துண்டு செய்பொறி'' தொடர்பான செய்கைகள் "இரவையாக்கு பொறி'' தொடர்பான செய்கைகள், சாரம், சீனி சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட

*அசைத்தாச்சிகள் தொடர்பான செய்கைகள், "புறஉரு அமைக்கும் பொறி" தொடர்பான செய்கைகள், "அரித்தற் பொறி" தொடர்பான வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, "மண்டி இறுக்கு பொறி" ஆகியன தொடர்பான வேலை, "அதிர்வு மேசை" "ஆற்று குழாய்" தொடர்பான வேலை.*

**"ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்)** :

***(அ) விசுக்கோத்து உற்பத்தி*** :

*பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்.*

*மா, சீனி , தாவரநெய், தாவரக் கொழுப்பு, குளுக்கோஸ், லெசின் சாரவகை, கொக்கோதூள், பாற்கட்டி, நீரில் ஊறிய பின் உலர்ந்த தானியம், பால்மா இரசாயனப் பொருட்கள், வெண்ணெய், அமோனியா, அப்பச்சோடா, முட்டை மற்றும் சேர்ப்புத் திரவியங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதலும் பண்டகசாலையிலிடுதலுடன் தொடர்பான வேலை சேர்ப்புத் திரவியங்களை ஏற்றுதலும் இறக்குதலும் சுமத்தலும் ஏற்றிச் செல்லுதலும் தொடர்பான வேலை கலந்து பிசைந்து மாவை வெட்டும் மேசையிற் பரவுதலும், விசுக்கோத்துத் தகரங்களையும் பொட்டளங்களையும் கலத்தலும் அடுக்குதலும் ஏற்றுதலும் இறக்குதலும் தொடர்பான வேலை பொட்டலமாக்குதலும், சூடபினால் முத்திரையிடலும் நாமவிலாசம் ஒட்டுதலும் பெட்டிகளில் அடைத்தலும் அட்டைப்பெட்டிகளை ஒட்டுதலும்.*

***(ஆ) இனிப்பு உற்பத்தி*** :

*பழவெல்லம், சீனி சார்வகை, கொக்கோ விதைகள், பால் மா, தாவர வெண்ணெய், ஊன்பசை (Gelatin), இரசாயனப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் உட்பட்ட சேர்ப்புத் திரவியங்களை ஏற்றுக் கொள்ளுதல், பண்டகசாலையிடுதலும் தொடர்பான வேலை, சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும், அளத்தலும், கலத்தலும், ரொபி, சொக்கிலேற்று, தித்திப்புப் பண்டங்கள் ஆகியவற்றை நிறுத்தலும், பொட்டல மாக்குதலும், தித்திப்புப் பண்டங்களைத் தட்டங்களிற் சேர்த்தலும், வெப்ப அறையில் தித்திப்புப் பண்டங்களை உலர்த்தலும், ஊன்பசையும், சாயப் பொருளும் இடுதல், ஜுஜுப்புகளை தட்டங்களிற் சேர்த்தல், ஜுஜுப்புகளை நிறுத்தலும் பொட்டலமாக்குதலும், தித்திப்பு பண்டங்களையும், சொக்கிலேற்றையும் காகிதத்திற் சுற்றுதலும், நாம விலாசம் ஒட்டுதலும், பொட்டலமாக்குதலும், மிட்டாய் உற்பத்தி தொடர்பான அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவ்வாறாயினும்.*

**"இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்)** :

***(அ) விசுக்கோத்து உற்பத்தி*** :

*பிசைந்த மாவைப் பிரித்தல் தொடர்பான செய்கைகளை, சூடாற்று பரண்களுக்கும் கழுவுதலும் துப்பரவு செய்தலும், வெட்டிய விசுக்கோத்துக்களைச் சேர்த்தலும் அடுக்குதலும், விசுக்கோத்து உற்பத்தி தொடர்பான அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் எவ்வாறாயினும்,*

***(ஆ) இனிப்பு வகை உற்பத்தி*** :

*தித்திப்புப் பண்டங்கள், சொக்கிலேற்றுகள், ரொபிகள் என்பவற்றைத் தரம் பிரித்தல், பைகளுக்கு முத்திரையச்சிடுதல், சொக்கிலேற்று அச்சுகளை நிரப்புதல், சொக்கிலேற்றை அச்சுகளிலிருந்து அகற்றுதல்.*

***அட்டவணை I***

**இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகள்**

*மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்*

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச. | 2 ஆம் வகுப்பு ரூ. ச. | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5ஆம் வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| "அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 10,962.00 | 11,112.00 | 11,262.00 | 11,412.00 | 11,562.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 10,962.00 | 11,112.00 | 11,262.00 | 11,412.00 | 11,562.00 |

*அட்டவணை I (தொடர்ச்சி)*

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச. | 2 ஆம் வகுப்பு ரூ. ச. | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5ஆம் வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| “ஆ” வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 10,542.00 | 10,667.00 | 10,792.00 | 10,9176.00 | 11,042.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 10,542.00 | 10,667.00 | 10,792.00 | 10,917.00 | 11,042.00 |
| “இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 10,122.00 | 10,222.00 | 10,322.00 | 10,422.00 | 10,522.00 |
| (ஆ) இனிப்பு வகைஉற்பத்தி | 10,122.00 | 10,222.00 | 10,322.00 | 10,422.00 | 10,522.00 |

***விளக்க அட்டவணை II***

**இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகள்**

*மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்*

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச. | 2 ஆம் வகுப்பு ரூ. ச. | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5ஆம் வகுப்பு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| “அ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 10,500.00 | 10,650.00 | 10,800.00 | 10,950.00 | 11,100.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 10,500.00 | 10,650.00 | 10,800.00 | 10,950.00 | 11,100.00 |
| “ஆ” வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 10,080.00 | 10,205.00 | 10,330.00 | 10,455.00 | 10,580.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 10,080.00 | 10,205.00 | 10,330.00 | 10,455.00 | 10,580.00 |
| “இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 9,660.00 | 9,760.00 | 9,860.00 | 9,960.00 | 10,060.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 9,660.00 | 9,760.00 | 9,860.00 | 9,960.00 | 10,060.00” |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### ஆடைகள் உற்பத்தித் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் தொழில் உறவுகள், அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள்,
அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 12.

### அட்டவணை

ஆடைகள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி 14688/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 1668/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :-

"பகுதி II

ஒரு மாதத்திற்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

**தொழிலாளர்கள் வகுப்பு**

தரம் I (அ) வடிவமைப்போர், தையலாளர்கள், வடிவம் துளையிடுவோர், டிஸ்கெற் தயாரிப்போர் ;

(ஆ) தலைவர்கள் அல்லது பகுதி மேற்பார்வையாளர்கள்

தரம் II துணி வெட்டுவோர், கையால் துணிவெட்டுவோர், இயந்திரம் பழுதுபார்ப்போர், இறுதியாகச் சரிபார்ப்போர்.

தரம் III சரிபார்ப்போர், தரம் பிரிப்போர், துணி அழுத்துவோர் (ஆண்கள்), சில்லறை வேலை செய்வோர் (பெண்கள்) பெயர் முத்திரையிடுவோர் (பெண்கள்), துணி அழுத்துவோர் (பெண்கள்), தையல் இயந்திரம் இயக்குவோர், மின் அழுத்தி இயக்குநர்கள், வழங்கும் தொழிலாளர்கள் (பெண்கள்), சித்திர வேலைப்பாடு இயந்திரத்தினால்/ கையால் செய்வோர்.

தரம் IV துணி விரிக்கும் ஆண்கள், துணி விரிக்கும் பெண்கள், பொதியிடுவோர், செலபின் பைகளும், அட்டைப் பெட்டிகளும் தயாரிப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளர்கள், களஞ்சியத் தொழிலாளர்கள்.

**தரம் V பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் ;**

பயிற்சியாளர்களும், பயிலுநர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் தொழில் பயிற்சியாளர் அல்லது பயிலுநர் தொடர்பான பயிற்சிக்காலம் 156 வேலை நாட்களைக் கொண்டமைந்ததாகக் கருதப்பட வேண்டும்.

**சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | தரம் I அ<br>ரூ. ச. | தரம் I ஆ<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,530.00 | 10,140.00 | 9,125.00 | 9,075.00 | 8,625.00 | 5,700.00 " |
| 2 ஆம் ஆண்டு | 10,730.00 | 10,315.00 | 9,275.00 | 9,200.00 | 8,725.00 | |
| 3 ஆம் ஆண்டு | 10,930.00 | 10,490.00 | 9,425.00 | 9,325.00 | 8,825.00 | |
| 4 ஆம் ஆண்டு | 11,130.00 | 10,665.00 | 9,575.00 | 9,450.00 | 8,925.00 | |
| 5 ஆம் ஆண்டு | 11,330.00 | 10,840.00 | 9,725.00 | 9,575.00 | 9,025.00 | |

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**கட்டிடத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் கட்டிடத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள முடிபுகள் கௌரவ தொழில் உறவுகள், அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இம் முடிபுகள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
தலைவர்,
தொழில்,தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 05,
2012,திசெம்பர் 12.

**அட்டவணை**

கட்டிடத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1950 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 10141 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**"II ஆம் பாகம்**
**நேர வேலைக்கான கீழெல்லை விகிதங்கள்**

I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதான சாதாரண வேலை நாளொன்றிற்கான கீழெல்லை திரட்டிய சம்பள வீதம் அவர்களுக்கெதிரே II ஆம் நிரலிற் கூறப்பட்டுள்ளவாறானவையாக இருத்தல் வேண்டும்.

| நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| **தேர்ச்சியற்றோர்** | 455.00 |
| ***தேர்ச்சியுள்ளோர் :*** | |
| வண்ணம் பூசுவோர், அலங்கரிப்போர், ஓடு பொருத்துவோர் (கூரை), பரண் கட்டுவோர், இயந்திர உபகரணங்கள் இயக்குவோர், கங்காணி, மேசன்மார் (கட்டிடம்), தச்சுத் தொழிலாளர் (கட்டிடம்), அகழ்வோர், கட்டியெழுப்புவோர் (உருக்கு நிர்மாணம்), உபகரணங்கள் பேணுவோர், உலோகவேலை செய்பவன் | 532.00 |

**விளக்க அட்டவணை**

மாதத்திற்கான கீழெல்லைச் சம்பள விகிதங்கள்

I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதான மாதமொன்றிற்கான கீழெல்லைச் சம்பள விகிதங்கள் கீழே உள்ள நிரலிற் கூறப்பட்டுள்ளவாறானவையாக இருத்தல் வேண்டும்.

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் ஆண்டு ரூ. ச. | 2 ஆம் ஆண்டு ரூ. ச. | 3 ஆம் ஆண்டு ரூ. ச. | 4 ஆம் ஆண்டு ரூ. ச. | 5 ஆம் ஆண்டு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சியற்றோர் | 11,375.00 | 11,475.00 | 11,575.00 | 11,675.00 | 11,775.00 |
| தேர்ச்சியுள்ளோர் | 13,300.00 | 13,475.00 | 13,650.00 | 13,825.00 | 14,000.00" |

1- 65/9

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

**சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

*1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 9 ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பின்வரும் ஆட்கள் சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையின் உறுப்பினர்களாக இருப்பதற்கு 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்ற 3 ஆண்டுக் காலப்பகுதிக்கு கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என 1971.06.04 ஆந் திகதிய 14961 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 30 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
*2012, திசெம்பர் 12.*

**நியமன உறுப்பினர்கள்** :

1. திரு. ஓ. ஜி. பெரேரா
2. திரு. எம். விமலசேன
3. திரு. ஆரியதாச ஹேவமலாகே

**தொழில்தருநர் பிரதிநிதிகள்** :

1. திரு. பிரசாத் டி சில்வா
2. திருமதி டபிள்யு. எம். வை. விஜயவர்த்தன
3. திரு. ஜி. கே. விதானகே
4. திருமதி மானல் வனிகசூரிய
5. திரு. டி. ஜே. எம். ஜே. டி. உதயகுமார்
6. திரு. ஜெஹன் கிறிசாந்த பெர்னாண்டோ
7. திரு. சுமித் நிசாந்தருக்குநாயக்க
8. திரு. பி. கே. டி. ஜி. சி. மலிந்த அல்விஸ்

**ஊழியர் பிரதிநிதிகள்** :

1. திரு. பி. ஜே. ஏ. பெரேரா
2. திரு. கே. இலங்கக்கோன்
3. திரு. டபிள்யு. கே. பியரத்ன
4. திரு. பி. என். எஸ். ஜே. கருணாரத்ன
5. திரு. பி. ஹெட்டியாராச்சி
6. திரு. ஜி. எம். எஸ். பி. டி. எஸ். சூரியவன்ச
7. திரு. ஜீவரத்ன வெத்தசிங்க
8. திரு. யு. சி. பெரேரா.

*1- 65/10*

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### உணவுச்சாலைகள், உணவு வழங்கல் தொழில் தொடர்பான சம்பளச் சபை

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் உணவுச்சாலைகள் உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012, திசெம்பர் 12.

### அட்டவணை

*உணவுச்சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியன்று வெளிவந்த 34 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1739/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் மேலும் பின்வருமாறு புதிய வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-*

*உணவுச்சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் கீழ் காணப்படும் விளக்க அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்.*

*"பாகம் I*

**வேலையாளர்களின் வகுப்பு :**

*தரம் I*

*உதவி அறைப் பையன்கள், தரிக்குமிடப் பரிசாரர், தரிக்குமிடப் பெண் உதவியாளர், படுக்கையறைத் தொழிலாளர்கள், சுத்தஞ் செய்வோர், ஓய்வறைத் தொழிலாளர்கள், படுக்கையறை (மலசலகூட)த் தொழிலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள், அலுவலகப் பையன், அலுவலகத் தொழிலாளர்கள், பண்டகசாலைத் தொழிலாளர்கள், சைக்கிள் ஏவலாளர், சமையலறை சுத்தஞ் செய்வோர். சமையலறை உதவியாளர்கள், உண்கலம் கழுவுவோர், சமையலறைத் தொழிலாளர்கள், சுமையாளர், போசணப் பதார்த்தசாலைப் பையன், உதவியாளர், கோப்பை அறைப் பையன், குவளை அறைப் பையன், மதுபானசாலைத் தொழிலாளர், பயன்பணி வேலையாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள்/உதவியாளர்கள், தேர்ச்சியற்ற பராமரிப்புத் தொழிலாளர்கள்.*

*தரம் II*

*அறைப் பையன்கள், மனைப் பணியாட்கள், அறைப்பணிப்பெண், துணியறைப் பரிசாரர், அறைப்பெண், உதவியாளர், சேவகர்கள், தூதுப் பணியாட்கள், சரிபார்ப்போர், பணியறைப் பையன்கள், குற்றேவல் பையன், மின்தூக்கிப் பையன், வாயிலோன், பயணப்பொதி மின்தூக்கி இயக்குநர்கள், பயணிகள், மின்தூக்கி இயக்குநர்கள், உதவி உணவு பரிமாறுபவர், உதவி பண்டகசாலை மேலாள், பஸ்வண்டிப் பையன், உதவி மதுபானச் சாலையாளர், உதவி மதுபானச்சாலை பணியாளர், பிலியட்ஸ் மார்க்கர், நீச்சல் தடாக உயிர்க்காப்பாளர், சலவைச்சாலை உதவியாளர், தோட்டக்காரன், நீச்சல் தடாகப்பரிசாரர், ஓரளவு தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர்.*

*தரம் III*

தையற்பெண்கள் (கீம்ஸ்ட்ரெஸ்), தையற்காரர், உடம்பு பிடிப்போர், எழுதுவினைஞர் தரம் III, பண்டகசாலை உதவியாளர், சாரதிகள், மதுபான சாலைக் காசாளர்கள், சிட்டை எழுதுவினைஞர், பொது எழுதுவினைஞர், அந்தரங்க எழுதுவினைஞர், சிற்றுண்டிச்சாலைச் சமையற்காரர், தித்திப்புப் பண்டம் தயாரிப்பவர், உதவிச் சமையற்காரர், சமையலறை 3 ஆம் உதவியாளர், உதவி பாண் தயாரிப்பாளர், போசணப் பதார்த்தசாலையாளர், சமையற்காரர் தரம் III உதவி மணித் தலைமையாள், மண்டபச் சுமையாள், உணவு பரிமாறுபவர், மதுபானசாலைப் பணியாளர், பண்டசாலை மேலாள், மதுபானசாலைப் பரிமாறுநர், மதுபான பண்டகசாலை மேலாள், பாதுகாப்புக் காவலாளர், தலைமைத் தோட்டக்காரன், தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர், மதுபானச்சாலையாளர்.

*தரம் IV*

சுகாதாரக் களரி வரவேற்பாளர், எழுதுவினைஞர் தரம் II, உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர், பண்டகசாலை எழுதுவினைஞர், உதவி இரவுக் கணக்காய்வாளர், நேரம் குறிப்போர், காடெக்ஸ் உதவியாளர், கணக்கு எழுதுவினைஞர், உதவி கணக்கு பதியுநர், செலவின் எழுதுவினைஞர், வரவு எழுதுவினைஞர், விற்பனைப் பேரேட்டு எழுதுவினைஞர், சம்பள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், காசாளர் பொது உதவியாளர், தனியாள் உதவியாளர், உதவித் தலைமைச் சமையற்காரர், சமையலறை 2 ஆம் உதவியாளர், பாண் தயாரிப்பவர், பிரிவு தலைமைச் சமையற்காரர், சமையற்காரர் தரம் II, தொலைபேசி இயக்குநர், வரவேற்பாளர், மணித்தலைமையாள், தலைமைச் சுமையாள், அறைச்சேவைக் கட்டளை பெறுவோர், உணவு மேடைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பொறுப்பாளர், தலைமை உணவு பரிமாறுபவர், தலைமைப் பண்டசாலை மேலாள், தலைமை விருந்தோம்பற் பெண், தலைமைப்போசனப் பதார்த்த சாலையாளர், தேநீர் தயாரிப்பவர், பாதுகாப்புத் தலைவர், சிரேஷ்ட சலவைச்சாலை உதவியாளர்.

*தரம் V*

நிலமேற்பார்வையாளர், துணியறை மேற்பார்வையாளர், தாதிமார், உதவி மனைப் பொறுப்பாளர், எழுதுவினைஞர் தரம் I, பண்டகசாலைப் பொறுப்பாளர், தலைமைக் கணக்கு எழுதுவினைஞர், சிறாப்பர், கணக்குப்பதிவாளர், இரவுக் கணக்காய்வாளர், வருமானக் கணக்காய்வாளர், சுருக்கெழுத்தாளர், பிரதான எழுதுவினைஞர், பிரதான காசாளர், கணக்காய்வாளர், கொள்வனவு உதவியாளர், பிரதான நேரம் குறிப்பவர், சமையலறை மேலாள், மேற்பார்வையாளர், சமையலறை 1 ஆம் உதவியாளர், தலைமைச் சமையற்காரர், மேல் நிலை சமையற்காரர், உண்டிச்சாலைச் சமையற்காரர், முன்னறை அலுவலக எழுதுவினைஞர், விமான நிலையப் பிரதிநிதி, தலைமை வரவேற்பாளர், பிரதான தொலைத் தட்டெழுத்து இயந்திர இயக்குநர், பிரதான தொலைபேசி இயக்குநர், ஒதுக்கீட்டு எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், குதிரையோட்டி முகாமையாளர் பாதுகாப்புப் பணிமுறை மாற்றத் தலைவர், தோட்ட மேற்பார்வையாளர், பொறியியல் பொறுப்புப் பணியாளர், நீச்சல் தடாக மேற்பார்வையாளர்கள்.

**விளக்க அட்டவணை**

***ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த் சம்பள வீதம்***

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூபா . ச. | தரம் II<br>ரூபா . ச. | தரம் III<br>ரூபா . ச. | தரம் IV<br>ரூபா . ச. | தரம் V<br>ரூபா . ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,660.00 | 10,080.00 | 10,500.00 | 10,920.00 | 11,340.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,760.00 | 10,205.00 | 10,650.00 | 11,095.00 | 11,540.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,860.00 | 10,330.00 | 10,800.00 | 11,270.00 | 11,740.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,960.00 | 10,455.00 | 10,950.00 | 11,455.00 | 11,940.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,060.00 | 10,580.00 | 11,100.00 | 11,620.00 | 12,140.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,160.00 | 10,705.00 | 11,250.00 | 11,795.00 | 12,340.00 |
| 7 ஆம் ஆண்டு | 10,260.00 | 10,830.00 | 11,400.00 | 11,970.00 | 12,540.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,360.00 | 10,955.00 | 11,550.00 | 12,145.00 | 12,740.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,460.00 | 11,080.00 | 11,700.00 | 12,320.00 | 12,940.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,560.00 | 11,205.00 | 11,850.00 | 12,495.00 | 13,140.00" |

1- 65/11

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### செயற்கைத் துறைமுகம், துறைமுகம் மற்றும் துறைமுகப் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபை

*சம்பளச் சபைகளை கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 9 ஆம் பிரிவின் கீழ், செயற்கைத் துறைமுகம், துறைமுகம் மற்றும் துறைமுகப் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையின் தொழிலாளர்களின் பிரதிநிதியாக திரு. ரணசிங்க டொன் ஜெயதிலக ஆராய்ச்சிகே அவர்களும், தொழில்தருநர்களின் பிரதிநிதியாக திரு. கிறிஸ் வீரசிங்க அவர்களும் முறையே திரு. டபிள்யு. உப்புல் பிரியசாந்த மற்றும டபிள்யூ. பி. கே. விரவர்த்தன என்பவர்களுக்குப் பதிலாக கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை, சம்பளச் சபைகள் ஒழுங்குவிதிகளின் 30 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியமனங்கள் 2013.08.14 ஆந் திகதி வரைக்குமே செல்லுபடியானதாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
*2012, திசெம்பர் 12.*

*1- 65/12*

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தேயிலை ஏற்றுமதித் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழிற் தொழில் உறவுகள் அமைச்சரவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள்
அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 05,
*2012, திசெம்பர் 12.*

#### அட்டவணை

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டனவும் 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் , அவ்வட்டவணையின் II ஆம் பாகத்துக் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

*"பாகம் II*

**வேலையாளர்களின் வகுப்பு** :

**தரம்** II

மாதிரி எடுத்துக்காட்டுதல் பெட்டிகளைத் திறத்தலும் உள்ளீடுகளை வெளியே எடுத்தலும், வெறும் பெட்டிகளை நிறுத்தல், பொறியிடுவதற்கான கடதாசிகளையும் ஈயத்தாள்களையும் வெட்டுதல், உள்வரிப் பூச்சிடுதல், பெட்டிகளில் தேயிலையைப் பொதியிடுதல்,

ஆயத்தஞ் செய்தல், மேலே உள்வரிப் பூச்சிடுதலும் பற்றாக வைத்தலும் மூடியிடுதலும், ஆணியடித்தலும் வளையமிடுதலும், கம்பி கட்டுதலும், பழைய அடையாளங்களை வழித்தெடுத்தல், தயாரித்தல், நிறுத்தல் அத்துடன் பொதியிடுதல், கட்டுத்துண்டுகள் ஒட்டுதல் கடைச்சணற் சாக்கு உறை வெட்டுதலும் தயாரித்தலும் கடைச்சணல் நூலினால் உறையிடுதல் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும் பசுந் தேயிலை வெட்டுதலும் அரித்தலும் மீள வெப்பமூட்டுதலும் பண்படுத்தலும் என்ற தொழில்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட வேலையாளர்கள்.

**இடைநிலைத்தரம்** :

தேயிலை நிரப்பப்பட்ட பெட்டிகளை நிறுத்தல் கையால் குவித்தல், கையால் கலத்தல் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள், பெட்டி தயாரிப்போரும் பழுதுபார்ப்போரும்.

**தரம் I**

பெட்டிகளைத் தரையிறக்குதலும் தூக்குதலும், அடுக்குதலும் பெட்டிகளைக் கலவைப் பலகைக்குத் தூக்கிச் செல்லுதலும் களஞ்சியத்துக்குத் தூக்கிச் சென்று மீள அடுக்குதல், பெட்டிகளை ஆயத்தஞ் செய்தல் அத்துடன் கப்பலில் கொண்டு செல்வதற்கென ஏற்றுதலும் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள்.

**காவலாளிகள்** :

*மாதமொன்றிற்கு வழங்கப்படக் கூடிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்*

| ஊழிய ஆண்டு | தரம் II ரூ. ச. | இடைநிலைத் தரம் ரூ. ச. | தரம் I ரூ. ச. | காவலாளிகள் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,660.00 | 10,080.00 | 10,500.00 | 9,660.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,760.00 | 10.205.00 | 10.650.00 | 9,760.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,860.00 | 10,330.00 | 10,800.00 | 9,860.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,960.00 | 10,455.00 | 10,950.00 | 9,960.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,060.00 | 10,580.00 | 11,100.00 | 10,060.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,160.00 | 10,705.00 | 11,250.00 | 10,160.00 |
| 7 ஆம் ஆண்டு | 10,260.00 | 10,830.00 | 11,400.00 | 10,260.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,360.00 | 10,955.00 | 11,550.00 | 10,360.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,460.00 | 11,080.00 | 11,700.00 | 10,460.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,560.00 | 11,205.00 | 11,850.00 | 10,560.00 |
| 11 ஆம் ஆண்டு | 10,660.00 | 11,330.00 | 12,000.00 | 10,660.00 |
| 12 ஆம் ஆண்டு | 10,760.00 | 11,455.00 | 12,150.00 | 10,760.00 |
| 13 ஆம் ஆண்டு | 10,860.00 | 11,580.00 | 12,300.00 | 10,860.00 |
| 14 ஆம் ஆண்டு | 10,960.00 | 11,705.00 | 12,450.00 | 10,960.00 |
| 15 ஆம் ஆண்டு | 11,060.00 | 11,830.00 | 12,600.00 | 11,060.00 |
| 16 ஆம் ஆண்டு | 11,160.00 | 11,955.00 | 12,750.00 | 11,160.00 |
| 17 ஆம் ஆண்டு | 11,260.00 | 12,080.00 | 12,900.00 | 11,260.00 |
| 18 ஆம் ஆண்டு | 11,360.00 | 12,205.00 | 13,050.00 | 11,360.00 |
| 19 ஆம் ஆண்டு | 11,460.00 | 12,330.00 | 13,200.00 | 11,460.00 |
| 20 ஆம் ஆண்டு | 11,560.00 | 12,455.00 | 13,350.00 | 11,560.00 |
| 21 ஆம் ஆண்டு | 11,660.00 | 12,580.00 | 13,500.00 | 11,660.00 |
| 22 ஆம் ஆண்டு | 11,760.00 | 12,705.00 | 13,650.00 | 11,760.00 |
| 23 ஆம் ஆண்டு | 11,860.00 | 12,830.00 | 13,800.00 | 11,860.00 |
| 24 ஆம் ஆண்டு | 11,960.00 | 12,955.00 | 13,950.00 | 11,960.00 |
| 25 ஆம் ஆண்டு | 12,060.00 | 13,080.00 | 14,100.00 | 12,060.00 |
| 26 ஆம் ஆண்டு | 12,160.00 | 13,205.00 | 14,250.00 | 12,160.00" |

1- 659/13

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தெங்கு உற்பத்தித் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள முடிபுகள், கௌரவ தொழில் தொழில் உறவுகள், உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

இம் முடிவுகள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில் தொழில், உற்பத்தித்திறன்
உறவுகள் அமைச்சு.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012,திசெம்பர் 12.

**அட்டவணை**

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 1668/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :

**" II ஆம் பாகம்**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் விவரிக்கப்பட்டுள்ள தெற்கு உற்பத்தித் தொழிலுக்குரிய நடவடிக்கைகளின் குறித்த சில செய்முறைகளுக்குப் பொருந்துவனவும் துண்டு வேலைக்குரியனவுமான கீழேல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு :-

| செய்முறைகள் | | வீதம் |
|---|---|---|
| **உலர்த்திய தேங்காய் பூ உற்பத்தி :** | | ரூ. ச. |
| தேங்காய்களை உரித்தல் | 1000 காய்களுக்கு | 400.00 |
| சிரட்டைகளை அகற்றுதல் | 1000 காய்களுக்கு | 278.00 |
| மேல் தோல் சீவுதல் | 1000 காய்களுக்கு | 278.00 |
| தேங்காய்ப் பருப்பைக் கழுவுதலும் உடைத்தலும் | 1000 இறாத்தலுக்கு | 242.00 |
| உலர்த்துதல் (சுயமாகவன்றி) | 1000 இறாத்தலுக்கு | 190.00 |
| சிறுதுண்டுகளாக்குதல் மூலம் உலர்த்தல் | 1000 இறாத்தலுக்கு | 255.00 |
| சலித்தெடுத்தலும் வகைப்படுத்தலும் | 1000 இறாத்தலுக்கு | 215.00 |
| அடைத்தலும் பெட்டிகளுக்கு அடையாளமிடுதலும் | 120-130 இறாத்தல் வரையான பை ஒன்றிற்கு | 17.00 |

**குடிசைக் கைத்தொழிலாகவன்றி வேறு வகையில் தும்பு, கயிறு ஆகியவற்றை உற்பத்தி செய்தல் :**

| | | ரூ. ச. |
|---|---|---|
| மட்டை அடித்தல் (கிளர்த்திய பின் ஈர நிறை) | அந்தர் ஒன்றிற்கு | 175.00 |
| மட்டைகளைப் பிரித்தலும் சுத்தப்படுத்தலும் (ஈர நிறை) | அந்தர் ஒன்றிற்கு | 175.00 |
| மெத்தைத்தும்பு சுத்தப்படுத்தலும் காயவைத்தலும், சிப்பமாக்குதலும் | அந்தர் ஒன்றிற்கு | 150.00 |
| சிலிர்த்த தும்பைக் கிளர்த்துதலும், சிப்பமாக்குதலும் | அந்தர் ஒன்றிற்கு | 142.00 |

**பாய்களின் உற்பத்தியும் பின்னலும் :**

| | | ரூபா சதம் |
|---|---|---|
| பாய்கள் | சதுர அடி ஒன்றிற்கு | 172.00 |
| பின்னல் பாய்கள் | சதுர யார் ஒன்றிற்கு | 156.00 |
| சிலிர்த்த தும்பைச் சிக்குவாங்குதலும் கூட்டுதலும் | அந்தர் ஒன்றிற்கு | 465.00 |

*III ஆம் பாகம்*

இதனோடுள்ள I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சாதாரண வேலைநாளொன்றிற்கு ஏற்புடையதாகவுள்ள நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம், II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பிரிவில் தரப்பட்டுள்ள வீதமாகும்.-

| நிரல் I<br>வேலையாளர் வகுப்பு | | நிரல் II<br>வீதம்<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. உலர்த்திய தேங்காய் உற்பத்தி செய்வதில் | கங்காணி ஒருவருக்கு | 440.00 |
| 2. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதில் | வேலையாள் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 425.00 |
| 3. இழை உற்பத்திப் பொருட்களையும் தும்பு உற்பத்திப் பொருட்களையும் செய்வதில் | வேலையாளர் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 370.00 |
| 4. தும்பு, சிலிர்த்த தும்பு உற்பத்தி | கங்காணி ஒருவருக்கு | 370.00" |

1 - 65 / 14

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவென அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள். 2013, ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யு. ஜே. எல். யு. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு,

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 5,
2012,திசெம்பர் 12.

**அட்டவணை**

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1978, ஒகத்து மாதம் 11 ஆந் திகதிய 330 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு , காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், கடைசியாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க அதிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்களின் பகுதி II ற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

"(அ) **தொழிற்பாட்டு ஆளணியினர்** : பாதுகாப்பு அலுவலர், பாதுகாப்பு காவலர், காவலாளர்கள், "பெட்ரல்மன்" அல்லது எப்பெயர் கொண்டாயினும் அழைக்கப்படும் ஊழியர்கள்.

(ஆ) **மேற்பார்வை ஆளணியினர்** : தொழிற்பாட்டு ஆளணியினருக்குப் பொறுப்பாக உள்ள ஊழியர்கள், பொறுப்பு அலுவலர்கள், மாற்று நேர மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள்.

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடை நேர வேலைக்கென ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தொழிற்பாட்டு ஆளணியினர் ரூ. ச. | மேற்பார்வை ஆளணியினர் ரூ. ச. |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 8,820.00 | 9,440.00 |
| 2 ஆம் ஆண்டு | 8,920.00 | 9,590.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,020.00 | 9,740.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,120.00 | 9,890.00 |
| 5 ஆம் ஆண்டு | 9,220.00 | 10,040.00 |
| 6 ஆம் ஆண்டு | 9,320.00 | 10,190.00 |
| 7 ஆம் ஆண்டு | 9,420.00 | 10,340.00 |
| 8 ஆம் ஆண்டு | 9,520.00 | 10,490.00 |
| 9 ஆம் ஆண்டு | 9,620.00 | 10,640.00 |
| 10 ஆம் ஆண்டு | 9,720.00 | 10,790.00 |
| 11 ஆம் ஆண்டு | 9,820.00 | 10,940.00 |
| 12 ஆம் ஆண்டு | 9,920.00 | 11,090.00 |
| 13 ஆம் ஆண்டு | 10,020.00 | 11,240.00 |
| 14 ஆம் ஆண்டு | 10,120.00 | 11.390.00 |
| 15 ஆம் ஆண்டு | 10,220.00 | 11,540.00 |
| 16 ஆம் ஆண்டு | 10,320.00 | 11,690.00 |
| 17 ஆம் ஆண்டு | 10,420.00 | 11,840.00 |
| 18 ஆம் ஆண்டு | 10,520.00 | 11,990.00 |
| 19 ஆம் ஆண்டு | 10,620.00 | 12,140.00 |
| 20 ஆம் ஆண்டு | 10,720.00 | 12,290.00 |
| 21 ஆம் ஆண்டு | 10,820.00 | 12,440.00 |
| 22 ஆம் ஆண்டு | 10,920.00 | 12,590.00 |
| 23 ஆம் ஆண்டு | 11,020.00 | 12,740.00 |
| 24 ஆம் ஆண்டு | 11,120.00 | 12,890.00 |
| 25 ஆம் ஆண்டு | 11,220.00 | 13,040.00 |
| 26 ஆம் ஆண்டு | 11,320.00 | 13,190.00" |

1- 65/15

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.